Registered as a News Paper in Ceylon P.M.G. No: H. A. 9/300] of 1958.

விரோதி ஆ (1889) ஆனி மீ 26உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதி ஆ ஆனி மீ உஎஉ வெள்ளிக்கிழமை (10 July 1964 [ 26 ச

## மாணிக்கவாசகசுவாமிகள் வரலாற்றில் அகச்சான்றுகள்

[ வைதீக சைவமாணவன் எழுதுவது ]

செந்தமிழ் வழங்கும் பாண்டிநன்னாட்டில் வைகையாற்றுக்கு அருகில் உள்ள திருவாதவூரிலே, அமாத்திய பிராமண குலத்திலே, சம்புபாதசிரியர் மனைவியாகிய சிவஞானவதியார் திருவயிற்றிலே திருவாதவூரடிகள் திருவவதாரஞ் செய்தார். சீகண்ட பரமசிவன், ஒருமுறை ஆயிரங்கண நாதர்களுக்கு, ஓர் இடத்திலிருந்து, சிவாகமப்பொருளை உபதேசித்துக்கொண்டிருந்தார் அப்பொழுது, இந்திரன் வெள்ளையானையின்மேல் தனக்குரிய பல வகையான ஆடம்பரங்களுடன் பவனிவந்துகொண்டிருந்தான். அங்கிருந்த ஆயிரங்கணநாதர்களில் ஒருவர் இந்திரனுடைய ஆடம்பரங்களைக் கண்டு அவற்றில் மனப்வைத்து ஆகம உபதேசத்தில் அசிரத்தையாயினார். அதனை அறிந்த சீகண்ட பரமசிவன் அக்கணநாதரை இந்நிலவுலகத்திலபிறந்துஉலக போகங்களை அநுபவித்து மீளக்கடவாய்" என்றார். இதே காலத்தில், தமிழ்நாடனைத்தும் சைவசமயமானது குன்றிப்போக, புத்தமதம் வளர்ந்து ஓங்கிநின்றது ஒருமதம் சிறிசில காலங்களில் அருகிப்போவதும் வேறொரு மதம் வளர்ந்து ஓங்குவதும் காலப்போக்கில் ஏற்படும் ஓர் இயற்கைச் செயலாகும் மாணிக்கவாசகசுவாமிகள் காலத்தைப்போலவே, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்திலும் சைவநெறி குன்றி சமணசமயமும் புத்தசமயமும் வளர்ந்திருந்தன. இச் சந்தர்ப்பங்களில் சைவமக்கள் வாளா விருந்துவிட்டார்களா? இல்லையே இல்லை சிவபாதவிருதயரும் சம்புபாதசிரியரும் கவலைகொண்டு நிகழ்காலத்தும் எதிர்காலத்துமுள்ள சந்ததியன்மாக்களும் உய்தல் வேண்டுமென்பதைத் திருவுளத்தடைத்து, ஒப்பற்ற, இல்லறத்திலிருந்துகொண்டே சர்வாபீஷ்ட வரதராகிய சிவபெருமானை நோக்கி, பரசமய நிராகரணம் பண்ணிச் சைவசமய தாபனஞ் செய்யவல்ல உயர்திவாப்பில்லாத சற்புத்திரரைப் பெறும்பொருட்டு மிகந்த அன்பினோடு தவஞ்செய்தாகள். வேண்டுவார் வேண்டுவதை ஈபவராகிய சிவபெருமான முறையே சம்பந்தமூர்த்திநாயனாரையும் திருவாதவூரடிகளையும் பூமியிலே திருவவதாரஞ் செய்யும்படி பணித்தருளினார். முற்காலங்களைப் போலவே இப்பொழுதும் தூய்மையான வைதிக சைவநெறி நிலைகுலைந்து அருகிப்போகின்றது மிண்டிய மாயாவாதமெனனும் சண்டமாருதம் சுழித்தடிதார்த்து எழுபுகிறது ஆனால், பரசமய நிராகரணமபண்ணிச் சைவசமயத்தை தாபனஞ் செயயவேண்டுமென்னும் ஆசைகொண்டு தவஞ்செய்வார் இல்லாமையே கவலைக்கிடமாகும்

நிற்க, இங்கே குறித்த மாணிக்கவாசக சுவாமிகளின் பூர்வ சன்ம வரலாற்றிற்குச் சான்றுகளுண்டா? பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணத்திலாவது, கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்திலாவது இச்சம்பவம் கூறப்படவில்லை. திருப்பெருந்துறைப் புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இச்செய்திக்கு ஓர் அகச்சான்றும் உண்டு. அது வருமாறு:—

"நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து"
— அதிசயப்பத்து 8

(முன்னாளிலே தன்னுடன் நில்லாதபடி என்னை விலக்கிச் சிறுகுடிலாகிய உடம்பினுட் புகுத்தி என்பது கருத்து

திருவாதவூரடிகள் வரலாற்றில் வேறு சில சம்பவங்களும் உண்டு. அவைகளைப்பற்றி இக்கால ஆராய்ச்சியாளர் தப்பான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இரண்டு மூன்று வருமாறு:—

பாண்டி மன்னன் திருவாதவூரைக் குதிரைகள் வாங்கிவரும்படி திருப்பெருந்துறைக்கு அனுப்பியதும், பின் சிவபெருமான நரிகளைப் பரிகளாக்கிக்கொண்டு வந்து கொடுத்ததும், பரிகள் நரிகளாக உருமாறி நிறைந்திரைகளை அழித்ததும் யாவரும் அறிந்த செய்திகளாகும். இக்காலத்திற் சிலர் இச்செய்திகளுக்குத் தத்துவக்கருத்துக்கள் கூறிச் செய்திகளை உண்மையில நடைபெறவில்லையென்று வாதிக்கிறார்கள். ஆனால் இச்செய்திகளுக்குத் திருவாசகத்தில் அகச்சான்றுகள் உள.

"மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளி"
— (திருப்பூவல்லி 20)

(தொடர்ச்சி 6மே பக்கம்)

### நற்சிந்தனை

(தாலாட்டு)

எட்டுத்திசையுமற் றெவ்விடத்தும்
நின்னையன்றிச்
சுட்டவே றுண்டோ
சுவாமிநீ கண்வளராய்.

### திருவாதவூரன் திருத்தாளுக்கு ஒருமலர்

பாய்பரியொன் றந்தப்
பரமனது தப்பானைத்
தூயதிரு வாய்மலராற்
செற்செய்து — மாயக்
கருவாதை யாமறியா
வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூரனுந் தேன்.
— திருவளிறறுப்படியார்

கருவாதை யாமறியா
வாறுசெயன் செய்த
திருவாத வூரன்
திருத்தாட் — கொருமலராய்
இவ்விதழை யிட்டதனு
லெங்கள் பணிமேலுஞ்
செவ்வை யுறுமே செழித்து.
— ப. ர்.

### நல்லூர்ச் சிவன்கோவிலில் ஆனியுத்தரம்

நிகழும் குரோதி ஆ ஆனி மீ 32-உ (15.7.64) புதன்கிழமை உதயத்தின் மூன் 3 மணியளவில் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் ஸ்ரீ நடராச மூர்த்திக்கும் 108 சங்காபிஷேகமும், காலை 5-30 மணியளவில் தர்சனமும், 6 மணியளவில் உற்சவமும் நிகழும். ஸ்ரீநடராஜமூர்த்தி காலை 6 மணியளவில் கோவிலில் இருந்து எழுந்தருளி பருத்தித்துறை வீதி, கோவில் வீதி, நாவலர் வீதி, வைமன் வீதி வழியாக மேற்படி ஆலயத்தை வந்தடைவார்

### கூட்டுறவாளர் தினவிழா

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் ஆதரவில் 10-7-64 வெள்ளிக்கிழமை காலை 9மணி தொடக்கம 12-7-64 ஞாயிறறுக்கிழமை இரவு 11 மணிவரை களிநொச்சியில்நடைபெறும்.

### மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசை

அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் பண்டிதர் மு. வேதநாயகம் அவர்கள் தலைமையில் 12-7-64 ஞாயிற்றுக்கிழமை ஷை விழா மிகச்சிறப்பாகநடைபெறவருகிறது ஆசிரியர் ச. சதாசிவம், ஆசிரியர் வை. ஆறுமுகம் ஆகியோருட்படப் பலர் உரை நிகழ்த்துவார்கள. ந.—நி.

X X X

மயிலிட்டி தெற்கு இந்துசமய கலாசாலையிலிருந்தச் சங்கத்தின 5-வது ஆண்டு விழாவும மாணிக்கவாசகர் குருபூசையும, 12-7-64 ஞாயிறறுக்கிழமை மயிலிட்டி ஞானோதய வித்தியாசாலையில நடைபெறும் என அறிவிக்கப்படுவளது. பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில நடைபெறவிருக்கும இக்கூட்டத்தில பலர் [illegible]

## மணிவாசக ஒளியால் நனி அழிவாவது மலமே!

[ பூசம் ]

அன்பா வழுவதுகண் டானந்தத் தேனமுதைத்
தென்பாங் குடையசிவன் தந்துதவத்—தின்றுசுவை
சொட்டுந் திருவா சகப்பாடு மெந்தைபுகழ்
சுட்டு பளவிற்றோ சொல்?

மன்னிய வுலகிற் றுன்னிய மலக்கோ
ணின்ன லிரியா துழல்புறச் சமய
வாரி சுவறிடு காரிய நிகழ்ந்து நற்
சாயமாஞ் சைவ சிந்தாந்த வுண்மைக்
கமைவர வொழுகுவோ ரரும்பே றெய்த,
ஓருபணி புரிமகற் றருகென வகத்து
ளிருத்தி யுருற்றிய விருந்தவ மதனான்,
யாங்கணும் விங்கிக ணிங்கிட வுதித்தன
னன்பருச் சிந்தைகொ ளானந்த பானுவெ
னின்னிசை வாசக மன்னவன், அவனால்,
அநும்பறல் மருந்தா யுதவுமோ ரிறைபுக
ழிருந்திடு பெரறியும் ஈடினல் லருளும்
வரதிடு முறையும் ஓதுநன் நூலும்
வளமுறப் பெற்றனம்; வாழுவ முயந்தெ
துமறுறப் பயின்றிவ ணும்பர மேத்த.

அதா அன்று,

மன்னிய வாசக மந்திர மருந்தா
லன்பு நெறிப்பட டானவங் களைந்து
மேவுவஞ் சிவனடி மேனிலை யுறவே.

## அன்பே இறைவனுடன் பேசுவதற்குத் துணை

பிரார்த்தனை என்னும் பொருள்பற்றி வித்துவான் பொன். முத்துக்குமாரு B. O L. அவர்கள் ஆற்றிய விரிவுரை

சென்ற 7 7—61 செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணியளவில் வடமாகாணச் சைவ இளைஞர் மாமன்றத்தின் கூட்டுப் பிரார்த்தனை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்து மகளிர் கல்லூரி மாணவிகளால் பக்திப் பாடல்கள் பாடப்பட்டன. பின்னர் பிரார்த்தனை என்னும பொருள் பற்றி வித்துவான் பொன். முத்துககுமாரன் B O. L. அவர்கள சொற்பெருககாற்றினார்கள். அப்போது அவர் கூறியதாவது;—

"உணவை உயிரென்று கொள்பவனால் ஒரு நேர உணவை விட்டு இருக்க முடியாது. அதுதான் அவனுடைய உயிர். ஆனால அறிவை உயிரென்று கொளபவனால் உணவை விட்டு இருக்க முடியாது என்கின்றான. ஆனால் மூன்றுமவலோ இவறறைவடக காறறே பிரதானம் எனவே காற்றின்றி வாழ முடியாது என்கின்றான. விஞ்ஞான ரீதியில் பார்த்தால காற்றின்றியும் வாழ முடியும். எனவே ஒரு அறிஞர் சொல்லுகிறார் எதையும் விட்டு என்னால் வாழமுடியும ஆனால்பிரார்த்தனை இன்றி என்னால் வாழ முடியாது என்று கூறிப் பிரார்த்தனையின் மகததுவத்தை விளக்குகினறார்.

ஆரியக் கூத்தாடினாலும் காரிததில் கண்ணாக இருக்க வேண்டும். சேகரித்த பொருளைப் பயனுள்ள வழியில் செலவு செய்தும் தான தருமங்கள செய்தும் புண்ணியத்தைப் பெறவேண்டும் இன்பத்தையே பெரிதாக எண்ணி வாழும மனிதனுக்கும் மிருகத்திற்கும வேறுபாடில்லை. தாவரங்கள் தங்கள இனங்களுடன் ஏதோ ஒரு முறையில் தொடர்பு கொண்டுள்ளன.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி வரு ஆனி மீ
உஎஉ வெள்ளிக்கிழமை

## மாயவலைப் படாமைக்கு மருந்து

அழகிய சிற்றம்பல நாதன் மாணிக்கவாசக சுவாமிகள் கூறத் தமது திருக்கரத்தினாலெழுதிய திருவாசகம் திருக்கோவையாராகிய திருமுறையைக் கனகசபையின்கண் சேமித்து மறைந்தனர். தில்லைவாழந்தணர்கள் அதனைக் கண்டெடுத்துப் படித்தபொழுது ஈற்றிலே திருவாதவூரன் சொல்லச் சிற்றம்பலவன் எழுதியதுஎன்ற கையெழுத்து இருக்கக் கண்டு யாவரும் அதிசயங் கொண்டார்கள். பின்பு தில்லைவாழந்தணர்களும் மற்றைச் சிதம்பரவாசிகளும் திருவாதவூரடிகளை அணுகி, திருவாசகம் திருக்கோவையாராகிய இருபாசுரங்களுக்கும் பொருள் கூறும்படி கேட்டார்கள். அப்பொழுது திருவாதவூரடிகள் கனகசபையின்கண சென்று பொருள் கூறுவதாகப் பதில் கூறினர். எல்லோரையும் கனகசபைக்கு முன் அழைத்துச் சென்று தாம் பாடிய திருவாசகம் திருக்கோவையாராகிய பிரபந்தங்களுக்குப் பொருளாவார் அந்த நடராசப் பெருமானே யெனத் தமது வலக்கரச் சுட்டுவிரலினால் காட்டியவுடன் பாலினுடன் நீர் கலந்தவாறு அவர் சிவத்துடன் கலந்துமறைந்தருளினர்.

"ஈன மிகுந் துளதோலு
மென் புநரம் புஞ்சீயு
மானவுடல் சிவரூபமா
மிதனைத் தெளியாம
லானுடலுக் கிரைதேடி
யுழன்றுலகிற் றமோறி
மாநரகிற் புகுதுமதோ
மாயைவலைப் படுவோர்கள்'

இழிவு மிகுந்துள்ள தோலும் எலும்பும் நரம்புஞ் சீயும் முதலிய சத்ததாதுக்கள் மயமாகிய திருவாதவூரடிகளுடைய உடம்பு ஈண்டுச் சிவரூபமாகியதற்குக் காரணம் அவர் சிவபெருமானிடத்துக் காட்டிய சிரத்தையும் அன்புமேயாகும். இந்த இரகசியத்தை அறிந்து மக்கள் தாங்களும் திருவாதவூரடிகளைப்போலச் சிவனிடத்து அன்பு செலுத்தாமல்நிலையில்லாத உடம்பை வளர்ப்பதன் பொருட்டு உலகெங்கும் திரிந்து சுழன்று தடுமாறிக் கொடிய நரகின்கண் வீழுகின்ற மார்க்கத்தில் வாழ்கின்றார்களே எனக் கடவுள்மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்தின் இறுதியிற் கூறிக் கவலைப்படுகின்றார். திருவாதவூரடிகள் தமது ஞானாசிரியரைத் திருப்பெருந்துறையில் முதலிற் கண்டபொழுது அவர் கண்ணீர் சொரிந்தழுது எதைக்கேட்டார்? "சுவாமி. மின்னலைப் போலத் தோன்றி மறையுந்தன்மை வாய்ந்த இந்த உலகிற் காணப்படும் போகப்பொருளொன்றும் எனக்குவேண்டாம். உம்முடைய திருவடியை யடைந்து எனது பிறவிநோயை நீக்க வேண்டும்". சிவபெருமான் அவருடைய விண்ணப்பத்துக் கிரங்கித் திருவடி தீக்ஷை செய்தார். திருவாதவூரடிகளுடைய பசுகரணங்களெல்லாம் சிவகரணங்களாக மாறிவிட்டன. சிவமாந் தன்மையை யடைந்து விட்டனர் பின்பு திருவாதவூரடிகளுடைய உடல் பொருள் ஆவி முழுவதும் சிவனுடையன வாய் விட்டன. வேதக் கருத்துக்களை அடக்கி அழகியசெந்தமிழ்ச் செய்யுள்களால் சிவபெருமானைத் துதித்துப் பாடினார். மாணிக்கம்போன்ற பதங்களை அமைத்துப் பாடியமையினால் அவருக்கு மாணிக்கவாசகர் என்ற காரணப்பெயர் சிவபெருமானாலேயே வழங்கப்பட்டது. பாசத் தடையினால் ஐம்புலன்களுக்கடிமையாய் நிலையில்லாத இன்பங்களை நாடி விளக்கில் விழுந்து மாயும்விட்டிற்பூச்சிபோலக் கலக்கத்துடன் இவ்வுலகில் வாழுகின்ற நம்மவர்களை மாய வலையிற் சிக்காமற் காக்க வல்லவை மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் திருக்கோவையாரென்னும் இரு பிரபந்தங்களுமே. அவை ஓதுகின்றவர்களுடையகன்மனத்தையும் உருக்கிச் சிவனிடத்தில் அன்பை உண்டாக்கும் தகுதியுடையவை. திருவாசகத்தை ஓதுகின்றவர் சிவனடியைச் சேர்வர் என மாணிக்கவாசகசுவாமிகளே தாம் பாடிய சிவபுராணத்தில் ஆணையிட்டிருக்கின்றனர்.

'பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார்
சிவனடிக் கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து'

சிவனுடைய திருவடி வணங்குதலே செல்வம். அச்செல்வத்தை அடைந்தவனுக்குத் துட்டநோயணுகாது. பஞ்சப்புலன்களும் அவனுக்கு அடிமையாகும். யமவாதனைபில்லை; துட்டர்களைக்கண்டஞ்சமாட்டான்; பல கலைகளையும் கற்றறிகின்ற அறிவு அவனிடத்தில், அவன் அவற்றைக் கற்காமலிருக்கவே வந்து சேரும். இவ்வுலகில் சீவன் முத்தனாக வாழ்ந்து இவ்வுலகைவிட்டு நீங்கும காலத்தில இறைவன் திருவடியைச் சேரும் பெருமபேறறையடைவான். ஆகையினால் மாணிக்கவாசக சுவாமிகள் பின்வரும் திருவாசகத்தில் சிவபெருமானுடைய திருவடியை, கன்றை ஈன்ற தாய்ப்பசுவானது எவ்வண்ணம் கன்றை நினைத்து அதனைக்கிட்டிச் சேரப் பேரவாக் கொண்டிருக்குமோ அவ்வண்ணம் சிவபெருமானுடைய திருவடியை அடைய மனங் கசிந்துருகி விண்ணப்பஞ் செய்கின்றார்,

உற்றாரை யான்வேண்டேன்
ஊர் வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங்
கூத்தாநின் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே.

இவ்வாறாக மாணிக்கவாசக சுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரண்டு பிரபந்தங்களும மக்களுடைய பிறவி நோய்க்கு மருந்தாவன; அவர்களை மாயவலையில் சிக்காமல் காக்க வல்லன.

# மாணிக்கவாசகரும் மானிடப் பிறவியும்

## முத்திபேற வாசகனார் காட்டும் வழி

ஆசிரியர் திரு. அ. துரைரத்தினம் அவர்கள்

நினைத்தற்கரிய பிறவிகளுள்ளே மிகமிக மேலான பிறவி மானிடப் பிறவி

இந்த மானிட சரீரம் நமக்குக் கிடைத்தது இறைவனை வழிபட்டு முத்தி இன்பம்பெறும்பொருட்டேயாம். இந்தப் பெருநோக்கத்திற்காகக் கிடைத்த சரீரத்தால் நாம் இறைவனுக்குத் தொண்டு செய்யவேண்டும். இதனை,

'மானிடப் பிறவிதானும்
வகுத்தது மனம்வாக்காயம்
ஆனிடத் தைந்துமாடும்
அரன் ணிக்காகவன்றோ"

என்னும் சிவஞான சித்தியார் பாடற்பகுதியால அறியலாம. மாணிக்கவாசகசுவாமிகளும்,

"எங்கை யுனக்கன்றா
தெப்பணியுஞ் செய்யற்க"

என்றார்.

மானிடப் பிறவி கிடைத்தும் தாம் அதனால் அடைய வேண்டிய பயனாகிய இறைவழிபாட்டைச் செய்யாதவறியதை யுணர்ந்து அப்பர் சுவாமிகள்,

"புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே
ஆற்றநாள் போக்கினேனே"

என்று பாடியுள்ளார், மாணிக்கவாசகரும்,

"தவமே புரிந்திலன் தண்மல
ரிட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையேன்"

என்று தாம் இறைவனை மலரிட்டு அருச்சியாததையிட்டு வருந்துகிறார். பூவும் நீரும் இட்டுவழிபடுதல் மனிதப் பிறவி யெடுத்தோரின் கடனென்பது,

"சம்பூவொடு தூபம்
மறந்தறியேன்"

என்னும் அப்பர் சுவாமிகள் திருவாக்காலும்,

"காலம்பெற மலர்நீரவை
தூவிதொழு தேத்தும்
ஞாலம்புகழ் அடியாருடல்
உறுநோய்நவி லாவே"

என்னும் சம்சந்தர் திருவாக்காலும்,

'நறுமலர்ப் பூவும் நீரும்
நாடொறும் வணங்குவேற்கு
அறிவினைக் கொடுக்கும் ஆறு
அப்படனே அஞ்சினேனே"

என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்காலும் துணியப்படும்.

மாணிக்கவாசக சுவாமிகள் தாம் ஆலயத்தொண்டு செய்யாததையுணர்ந்து,

"ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானநின் திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே"

என்று பாடிக் கசிந்துருகுகின்றார். இப்படியான தொண்டை நாம் ஒவ்வொருவரும் செய்யவேண்டும் என்று அப்பர் சுவாமிகளும்:

'நிலைபெறுமா றெண்ணுதியேல்' என்று தொடங்கும் தேவாரத்தால் உணர்த்துகின்றார். இத்தொண்டைத் தாம் செம்மை மனத்தோடு செய்ததாக மணிவாசகனார்:

"கொம்மை வரிமுலைக்
கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால்
திருப்பணிகள் செய்வேனுக்கு"

என்னும் திருவாசகப் பகுதியால் விளக்குகின்றார்.

"இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்து"

என்னும் தொடரால் மனிதனுடைய உய்வுக்கு நல்லாரிணக்கம் இன்றியமையாததென்கின்றார் மணிவாசகனார். தாம் அங்ஙன் இணங்காததையிட்டு,

'நண்ணிலேன் கலைஞானிகள்
தம்மொடும் நல்வினை நயவாதே'

என்று பாடி உருகுகின்றார்.

அப்பர்சுவாமிகள் 'ஞானியல்லேன் நல்லாரோடிசைந்திலேன்' என்றதுவும்,

பட்டினத்தடிகள் "நல்லாரிணக்கமும் நின்பூசைநேசமும் ஞானமுமே யல்லாது வேறு நிலையுளதோ" என்றதும் சிந்திக்கற்பாலன.

"கோவில் பொதியிற் குண
மிலவே
எங்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்ற திருக்குறளுக்கிணங்க அப்பர் சுவாமிகள் தாம் பாடிய திருவங்கமாலையில் "தலையே நீவணங்காய்" என்று தொடங்கி ஒவ்வொரு அங்கத்துக்கும் இறைவனோடு சம்பந்தங் கற்பிக்கின்றார் மாணிக்கவாசக சுவாமிகளும் தலைக்குரிமை இறைவனை வணங்குதல் என்னும் பொருளமைய;

"வணங்கத் தலைவைத்து
வார்கழலைவாய் வாழ்த்த
ஐவத்து"

என்றார்.

நாம் விபூதியை நிறையப் பூசவேண்டும். பிறவிப் பெருங்கடல் நீந்தப் பஞ்சாட்சரமாகிய தெப்பத்தைப்பிடிக்கவேண்டுமென்னும் கருத்தமையப்,

"பூசில்தாம் திருநீறே நிறையப்
பூசி'

என்றும்,

"வெண்ணீறணிலாதவரைக்
கண்டால்'
கும்மாநா மஞ்சுமாறே"

என்றும்,

"ஐந்தெழுத்தின் புணைபிடித்துக்
கிடக்கின்றேனே"

என்றும்,

"எண்ணிலேன் திருநாமம்
அஞ்செழுத்தும்
எவ்வாறு மறந்தனனே"

என்றும் பாடியுள்ளார்.

ஆகவே மானிடப் பிறவி யெடுத்த நாம்

"குருவருளும் வெண்ணீ
றெழுத்தைந்துங் கோயில்
அரனுருவும் என்றாலேமே
லாக்கும் — திருவடியுங்
கிட்டான வர்ச்சனையுந்
தொண்டும் சிவாலயர்க்கென்
றிட்டா ரகத்தியனா ரெட்டு"

என்னும் வெண்பாவுக்க

தொடர்ச்சி 8ம் பக்கம்

## கதிர்காமத் திருவிழா

### திருக்கேதீசுவரத்தில்

மேற்படி திருவிழா இம் மாதம் 23, 24, 25-ந் திகதிகளில் திருக்கேதீச்சரத்தில் அதிவிமரிசையாகக்கொண்டாடப்பட இருக்கிறது. இத் திருவிழாக்காலங்களில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் மாலை வேளைகளில் தேவார பாராயணம், புராண படனம், சைவப் பிரசங்கங்கள், முருகநாம பஜனை ஆதியனவும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. மூன்றாம்நாட் காலையில் பாலாவியில் முருகப்பெருமானது தீர்த்தோற்சவம் நடைபெறும். அடியார்கள் தங்கவும், அவர்களுக்கு அன்னதானம வழங்கவும ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

### உரும்பராயில்

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி கோயிலில் மேற்படி திருவிழா இம் மாதம் 9-7-64 ல் ஆரம்பித்து 25-7-64-ல் நிறைவெய்தும். விழாக்களில் சைவப் புலவர்கள் பண்டிதர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

நாள்; குரோதி ஆனி மீ உ௭௨ (12-7-64) ஞாயிற்றுக்கிழமை
இடம்: சைவபரிபாலன சபை, நாவலர் ஆச்சிரம மண்டபம்,

நிகழ்ச்சிகள்:

மு. ப. 9 மணி — பி. ப. 1 மணி: சிவபூஜா மண்டம் சிவபூசை, நாவலர் மண்டபம் கடவுளாராதனை, புராணபடனம் - திருவாதவூரடிகள் புராணம் 'திருவடிபெற்ற சருக்கம்' மாகேசுர பூசை.

இரவு 7 — 9 மணி: விரிவுரைக் கூட்டம்

தலைவர்:
பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர்

கூட்டுப் பிரார்த்தனை:
வடமாகிலச் சைவ இளைஞர் மாமன்றம்

'மாணிக்கவாசகரும் மனித வாழ்க்கையும்'
ஆசிரியர் திரு. அ. துரைரத்தினம்
"திருக்கோவையார்"
பண்டிதர் வித்துவான் திரு. இ திருநாவுக்கரசு
"திருவடிப் பேறு"
சித்தாந்த பண்டிதர் திரு வே. சோமசுந்தரம்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவ பரிபாலன சபை. மு. மயில்வாகனம்
யாழ்ப்பாணம், 6-7-64. சமயப்பிரசார அமைச்சர்.

## வடமாநிலச் சைவ இளைஞர் மாமன்றம் கூட்டுப்பிரார்த்தனை

19-7-64 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணியளவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனையும், திருமுறைப்பாராயணமும் நடைபெறும். சைவச்சான்றோர்கள் சமுகமளித்துச் சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

நிகழ்ச்சிகள்:

1. "பத்திப் பாடல்கள்" நாவலர் பாடசாலை மாணவர்கள்
2. பேச்சு:— "தேவாரப் பண்கள்"
   வித்துவான் இ. திருநாவுக்கரசு
3. "தமிழ்மறையோதல்"

குறிப்பு:— வாரத்தில் ஒருதினம் தேவார வகுப்பு நடத்துவதற்குரிய ஒழுங்குகளும் செய்யப்படும்.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டில்
புலோலி மேற்கு குஞ்சர் முருகர்
—வழக்காளி

எதிராக

இல. 7144
1 புலோலி தெற்கு வேலர் பரமு
2 தாமு சிவஞானம் — எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் குறித்த கோட்டால் அனுப்பப்பட்ட கமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் தனங்கள் 1964-ம் ஆண்டு ஆவணி மாதம் 10-ந் திகதி முற்பகல் 10 மணியளவில் குறித்த காணிகளிடமாகவிருந்து என்னாற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வ மராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று புலோலி கிழக்கு மழவராய குறிச்சியிறை "கூத்தாண்டி தோட்டம்" இதற்கு 1926-ம் ஆண்டு தை மாதம் 24-ந் திகதி உலாந்த மேஸ்தர் G. C. கணபதிப்பிள்ளையால் 4753-ம் இலக்க வழக்கில் வித்தாரிக்கப்பட்டதும் யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் 17001-ம் இலக்கப் பிரிவிடல் வழக்குடன் அணைக்கப்பட்டதுமான படத்தின்படி நில. பர. 21 குளி 16 24/32 இதில் குறித்த படத்தில் 2-ம், 3-ம் நம்பர் துண்டுகளுக்கு நில. பர. 4 குளி 15 31/32 இதில் வடக்குப்புறமாக நில பர. 2-ம் தெற்குப்புறமாக நில பர, 2-ம் நீக்கி, நடுப்பெற மிகுதிக்குக குளி 13 31/32, தலைவாசல் பனைகள் தென்னைகளும், எல்லைகிழக்கு மாப்பாணர் கனகசபாபதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு கழிவிட்ட பாகம். மேற்கு றோட்டு. தெற்கு மேலே விபரிக்கப்படும் காணி இது அடங்கலும். முழுக் காணிக்குட்பட வடகிழக்குப் புறமாக புதிதாய் வெட்டப்பட்ட கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் உரித்தும். பதிவு பருத்தித்துறை A 38/276,

2. புலோலி கிழக்கு மழவராய குறிச்சியிறை மேற்கூறிய "கூத்தாண்டி தோட்டம்" இதில் தெற்குப்புறமாக நி. பர 2 வீடு கொட்டில்கள், பனைகள், வேம்புகள், புளியமரமும் எல்லை கிழக்குத் தெற்கும் மாப்பாணர் கனகசபாபதிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு மேற்சொல்லிய காணி, மேற்கு றோட்டு. இவ்வெல்லைக்குட்பட்டவைகளடங்கலும். இன்னும் முழுக் காணிக்குட்பட வடகிழக்குப் புறமாகப் புதிதாய் வெட்டப்பட்ட கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரிததும். பதிவு பருத்தித்துறை A 38/274.

| | ரூபா. | சத. |
|---|---|---|
| தீர்வைத்தொகை | 1730 | 00 |
| 21-8-61 தொடக்கம் 24-1-62 வரை ரூபா 1300 க்கு 7 வித வட்டி | 38 | 00 |
| | 1758 | 00 |
| 24-1-62 தொடக்கம் 22-6-64 வரை ரூபா 1758-க்கு 5 வித வட்டி | 212 | 40 |
| | 1970 | 40 |
| கோட்டுச் செலவு | 228 | 23 |
| மொத்தம் | 2198 | 63 |

வடலிப்பாதி,
தும்பளை,
பருத்தித்துறை,
9—7—1964

ஆ. சபாரத்தினம்
கொமிஷனர்.

M 107 10-7-64.

---

இவ்வாரம் 13-7-64 — 19-7-64

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தொழிலிடுபாடுகளுக்கு ஓரளவு தோதான வாரம். உடல் நிலை திருந்தவேண்டும். மோசடி களவு காரணமான பொருளிழப்பு என்பன உண்டாம்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம். அதிக வேலை, நணபர், அயலவர், உதவியுண்டாம். உடல் நிலையைக் கவனிக்குக.

மிதுனராசி மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்

நிம்மதியிருக்காது. சுகவீனங்களும் உண்டாம், வெற்றிக்காகக் கடுமையாகப் பாடுபட வேண்டி வரும். பணமளவில் நல்லவாரம். பழையது தலீடுநற்பலனைத்தரும்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்

உறவினரும், நண்பரும் பணச்செலவை ஏற்படுத்துவர் எதிபாராத பிரயாணஞ் செய்யவேண்டிவரும் சிறுசுகவீனங்களுண்டாகும் கண்நோய்களுக்கிடமுண்டு.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

முதலீடுகளால் அதிகலாபம். நண்பர்களின் அதிகஉதவி, குடும்ப நிறைவுண்டு உண்டாம்

கன்னிராசி உத்தரம் 2, 3 பாதம் அத்தம் சித்திரை 1, 2 பாதம்.

வெற்றிக்குரிய பாதையை நீரே போராடிப் பெற்றுக்கொள்ளவேண்டும். எதிரிகளுக்கு இடமுண்டு நிச்சயம். நிலபுலங்களால் லாபம் உண்டாம். சிறு சுகவீனங்களுண்டாம்.

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

தந்தைவழி உறவினர் தொல்லை தருவர். அல்லது தந்தையார்க்கு தோயுண்டாகும் நிம்மதியிருக்காது. தொழிலிடுபாடுகளுக்கு ஏற்றவாரம்.

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

நோய்பணி குடும்பக் கவலை ஆதியன உண்டாம். தடைகளும் கண்டனங்களும் தலையிடும் சிறு விபத்துக்களுக்கேற்ற அறிகுறிகள் உண்டாம்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

விவசாய வருமபடி நிச்சயம். எதிரிடுக்கள் கரைந்து விடும். குழந்தைகள் மூலமான மகிழ்ச்சியுண்டாம். சுகவீனங்களுக்கும் குடுமடவடட்தில் ஐயங்களுக்கும் இடமுண்டு.

மகரராசி உத்தராடம் 2, 3, 4 பாதம் திருவோணம் அவிட்டம் 2ம் பாதம்

முயற்சிகளில் ஆரம்பஇடரகளின் பின்வெற்றியுண்டாம். நிம்மதியிருக்காது ஞாயிறு திங்கள செவ்வாய் காலை எச்சரிக்கை.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

இனத்தவருடன் மோதலுக்கிடமுண்டு. புதுவேலை வரக்கூடும் உடல் நிலை திருப்தியற்றிருக்கும் செவ்வாய் மாலை புதன் வியாழன் எச்சரிக்கையோடு கழிய வண்டும் பணமளவில் ஓரளவு நல்லவாரம்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாத ரேவதி.
1, 2, 3ம் பாதம்

பணமளவில் நல்லவாரம். புது முயற்சிகள் எச்சரிக்கையோடுகவனிக்கப்படவேணடும். இனத்தவருடனமோதலுக்கிடமுணடு நணபர்கள் உதவுவர். வியாழன மாலை வெளளி சனி எச்சரிக்கை

## கதிர்காமத்திருவிழா

நல்லூர்க்கந்தசுவாமி கோவலல் வழமைபோல விழா சிறபபாக முருகனடியாரகளால 9-7-64 தொடகக நடாததப பெற்று வருகிறது. இனறு யாழபபாணததிலுளள பலவேறு கூடுகளினாலும சபைகளினதும உதவியுடன கூட்டுப்பிரார்தனை நடைபெறுகிறது. பிரமஸ்ரீ C.S.S. மகாபாகவதர் 'கந்தர்கலிவெணபா' எனனும பொருள பொருளபறறி மாலைவேளைகளில பக்கவாததிய சகிதம பிரசங்கம நிகழ்ததுகிறார். கதிர்காமத தீர்தததோறசவ தினததனறு முருகப்பெரும னுக்கு விசேட அபிஷேகமும அடியாரகளுககு மாகேசுர பூசையும நிகழவும ஒழுங்குகள் செயயப்பட்டிருகக்கனறன.

## திரு விழாக்கள்

சுதுமலை அம்பாள் விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. 14-7-64 செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் திருவடி நிலையில் தீர்த்தத திருவிழாவும் நடைபெறும்.

---

இலா. 5. பயிர்வகைகளும் வீடுகளும் வடகிழக்கேயுளள கிணற்றில் பங்கு வழிவாய்ககாலும். எல்லை கிழகக கந்தப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளையினதனம் வடக்கு சின்னததம்பி பெண் சின்னப்பிள்ளைக்கும மறுபேருக்குமுரிய ஆதனம, மேற்கு கந்தப்பிள்ளை வேலுப்பிள்ளைக்கும மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு மூததம்பி வல்லிபுரததுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் இதடங்கலும். பதிவு H 256/288.

அ வெற்றிவேலு,
கொமிஷனர்.
19. வேம்படி வீதி.
யாழ்ப்பாணம்.
M 97. 10-7-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவிட்டபுரம்
1, அம்பலவாணர் இராசதுரையும் பெண்
2. பரிமளலெட்சுமியும்
—வழக்காளிகள்

இல. M.B 5577

எதிராக

வசாவிளான்
1. வயிரவநாதர் பொன்னம்பலம்
2. சுபபர் சின்னததம்பியும் பெண்
3. சின்னுச்சிப்பிள்ளையும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M B. 5577-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைததக் கோட்டுக் கட்டளைப்படி பன்னுல் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1964-மஸு ஆவணி மீ 15உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலததில விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 1500 ம். 22 - 4 - 63 தொடக்கம் 11-11-63வரைக்கும் ரூபாய் 150-க்கு 11 வித வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5 வித வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 217/26½-ம்.

ஆதன விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டி கோவிற்பற்று வயாவிளான் இறை "நிறைகவிட்டி" நில பர.இலா 6-ம், பயிர்வகைகளும், எல்லை கிழக்கு சீனிவாசகம் பெண் முததுப்பிள்ளையினதனம், வடக்கு வலலிபுரம் இளையதம்பிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு இராமலிங்கம் நடராசாவினுதனம், தெற்கு தம்பிமுத்து இராசரத்தினததினுதனம் இதடங்கலும் பதிவு H 264/77,

2. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டி கோவிற்பற்று பலாலி இறை "பயிரிக்கட்டை" நில பர.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோடு

யாழ்ப்பாணம் பிரதான வீதி
1. S, P. இன்னாசிமுத்துவும் பெண்
2. மேரி றெஸ்லினாவும்
—வழக்காளிகள்

இல, M.B. 5342

எதிராக

யாழ்ப்பாணம், பீச்றோட்
1, சன்றியா பங்கிருசும் பெண்
2. ஞாத்தம்மாவும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M.B. 5342-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1961ஆம் ஆவணி மீ 15உ 15 - 8 - 64, சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3517 - சதம் 50-ம். இதில் ரூபா 3000-க்கு 21-1-63 தொடக்கம் 16-5-63 வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியையும் அதன்பின் முழுததொகைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 92/30 + ரூபா 44/45 + ரூபா 33/85 இல் ரூபா 135 கழிக்கப்பட வேண்டியது.

காணி விபரம்:

யாழ்ப்பாண டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று கரையூர் இறை குடியிருப்பு குளி 5 5/8-ம், வீடும், வான் பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கும். மேற்கும், தெற்கும் றோட்டு, வடக்கு அந்தோனிப்பிள்ளை செல்லத்துரைக்கும் பெண் மரியம்மாவிற்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

க. சுப்பிரமணியம்
கொமிஷனர்,
24-ம் நம்பர், 1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,
27-6-1964.
M. 101 10-7-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

யாழ்ப்பாணம்
டிஸ்திரிக்கோட்டில்
வழ. இல, M.B. 4655
மல்லாகம்
1. மாதர் கந்தையாவும் மனைவி
2. நாகரெத்தினமும்
—வழக்காளிகள்

எதிராக

மல்லாகம் கோட்டுக்குச்சமீபமாக
சின்னததமபி சுப்பிரமணியம்
—எதிராளி

இவ்வழக்கில் எனக்குக்கிடைத்த உத்தரவின்படி கீழ்காணும் ஆதனம் 1964-ம்ஆம் ஆகஸ்ட்மீ 15உ (15-8-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 426. மேலும் 28-2-62 தொடக்கம் 15-11-62 வரைக்கும் ரூபா 250-க்கு வருடமொன்றுக்கு 10% வீத வட்டியும் அதன் பின் முழுததொகைக்கும் இறுக்கும் வரை 5% வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 134-35 சதமும்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோயிற்பற்று மல்லாகம் இறை "முடவன்சீமா" நிலப்பரப்பு [illegible]. செய்பயிர் வான்பயிர்களும். வடக்கில் கிணற்றில் பங்கும். இதற்கு எல்லை கிழக்கு சின்னத்தம்பி கணபதிப்பிள்ளைக்கும் பங்காளர்களுக்கும், வடக்கு கயிலாசபிள்ளை கைம்பெண் பூரணததுக்கும் பங்காளர்களுக்கும், மேற்கு நன்னித்தம்பி இளையதம்பியின் உரிமைக்காரர்களுக்கும், தெற்கு சங்கரப்பிள்ளை மனைவி சிவரெத்தினததுக்கும் பங்காளர்களுக்கும், இதில் சொரியலாய் (¼)கால்பங்கு. பதிவு H 111/21.

வி. செ. குட்டிப்பிள்ளை.
கொமிஷனர்.
ஏலவிற்பனவாளரும்,
விலைமதிப்பாளரும்,
643 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 3-7-64.
M 99 10-7-64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

—o—

சுப்பையா பொன்னம்பலம் கந்தையா வண்ணாபணை கிழக்கு —வழக்காளி

இல. M.B. 3951

எதிராக

1. சிவலை சின்னையாவும் பெண்
2. இராசம்மா —சுதுமலை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B. 3951-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 4 துண்டுக காணிகளை 1964-ம் ஆ ஆவணிமீ 28உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 2375-ம், 10-3-61தொடக்கம் 2-7-62 வரைக்கும் ரூபாய் 1500-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 204-30 சதம்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று மானிப்பாய் இறை 'பெரிய புலம்" நிலப்பரப்பு 4 குளி ½, வீடும் பயிர்வகைகளும். எல்லை கிழக்கு எதிராளிகளின் ஆதனமும், கீழ் குறிப்பிட்ட விபரப்படியும், வடக்கு வேலன் பொன்னன் மனைவி சின்னம்மாவின் ஆதனமும், மேற்கு கட்டையன் சுப்பையாவின் ஆதனமும், தெற்கு காததான் இராமனும் வேலன் சின்னையாவின் ஆதனமும், இந்த ஆதனம் முழுவதும் உததரவுபெற்ற உலாந்தா எஸ். முத்துக்குமாரசாமி அவர்களால வரையப்பட்ட படத்தில் ஒன்றாவது துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. படம் இலக்கம் 11/1945 திகதி 24-5-1945. பதிவு இலக்கம் E 322/137.

2. "குசவன்புலம்" நிலப்ப.2 குளி 4. இதற்குக்கிணறும் தூர்வைப்பங்கும் வழிவாயக்கால் உரிமைப்பங்கும், செய்பயிர் வான்பயிர் வகைகளும் பனைகளும், இந்த ஆதனத்திற்கு எல்லைகிழக்கு ஓழுங்கையும் மாணிக்கத்தன பெண் சரஸ்வதியம்மாளின் ஆதனமும், வடக்கு சின்னையன் சுவலனின் ஆதனமும், மேற்கு மேற்படி ஆதனமும் ஆறுமுகம் சுந்தரத்தின் ஆதனமும், தெற்கு செல்லன் பெண் பாறியின் ஆதனமும், முழுவதிலும் ½ பங்காகப் பிரிக்கப்படாத ஆதனம். இதன் பதிவு இலக்கம் 342/136.

3. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக யாழ்ப்பாணப்பகுதி அச்சுவேலி கோவிற்பற்று வளளாய் இறை "கிந்தசிமா" நிலப்பரப்பு 1 3/8. இதன் நிலப்பரப்பு 5¼-ல் கால் பங்கிற்குப் பதிலாக மேற்குப்பக்கமாய் உள்ள ஆதனம். எல்லை கிழக்கு தாமு கணபதியின் ஆதனமும், வடக்கு கிட்டிணன் பெண் கனகத்தின் ஆதனமும், மேற்கும் தெற்கும் ஓழுங்கையும் வடக்கில் இருக்கும் கணற்றுப்பங்கும்' அவ்விடத்து வழிவாய்க்கால் உரிமைப்பங்கும். இதன் பதிவு இலக்கம் K 147/140

4 மேற்குறிப்பிட்டபடி "வளலாய் இறை" 'பறையன்கலட்டி" நில பரப்பு 4½ ல் பிரிக்கப்படாத நில பரப்பு ½, வீடும் செய்பயிர் வான்பயிர் வகைகளும். மேற்குறிப்பிட்ட நில பரப்பு 4½-க்கு எல்லை கழக்கு ஆசையன் பெண் தெய்வியின் ஆதனமும், வடக்கு ஓழுங்கை, மேற்கு சிதம்பரம் பெண் நாசகத்தின் உரிமையாளர்களின் ஆதனமும், தெற்கு றோட்டு. பதிவு இலக்கம் K 183/94.

வே. கோபாலபிள்ளை,
கொம்மிஷனர்.
Commissioner of Sales.

22. ஆஸ்பதிரி வீதி,
யாழ்ப்பாணம், 20-6-64.
M. 96 10-7-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டிலே

புத்தூர் புத்தூர் மேற்கு அம்பலவாணர் இராசதுரை —வழக்காளி

வழ. இல. M,B, 5639

மட்டுவில்,
மட்டுவில் வடக்கு
இராமலிங்கம் சந்திரசேகரம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5639-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்க்காணும் ஒரு துண்டுகாணி 1964-ம் ஆ ஆகஸ்டுமீ 8உ (8-8-1964) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:,வட்டிமுதல் ரூபா 3193-74, இன்னும் ரூபா 1750-க்கு 25-5-1963 தொடக்கம் 17-1-1964 வரை 9 வீத வட்டியும் கூடிய தொகைக்கு 17-1-64 தொடக்கம் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 313-32½யும்,

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிகோவிற்பற்று மடலவில் தெற்கிறை "பரையட்டி வளவும் ஆலமோடை வளவும்' நில. பர. இருபத்தொன்பது (29) எல்லை கிழக்கும் வடக்கும் ஓழுங்கை, மேற்கு செல்லையா பாலசுப்பிரமணியதினுதனம். தெற்கு பன்றித்தலச்சி அம்மன்கோவிலாதனமும் மயிலன் கதிரனினுதனமும். இதடங்கலிற் சொரியலாய் 2/3 பங்கு.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில், 1-7-64.
M. 100 10-7-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—o—

இல. M. B. 5244

வயிரவி முருகேசு நம். 10 திருமகள் வீதி அரியாலை மேற்கு யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

1 சிவக்கொழுந்து தம்பித்துரையும்
2 பெண் சரஸ்வதி இருவரும் அரியாலை மேற்கு யாழ்ப்பாணம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 5244-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1964ம்ஆ ஆவணிமாதம் 1ந்தேதி (1-8-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை:—முதல்வட்டி ரூபாய் 3510/ம் 27-11-62 2-5-63 வரைக்கும் ரூபாய் 2000-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 247 சதம் 27 இதில் 1655 ரூபா கொடுபட்டது

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டுக்குழி கோயிற்பற்று சிவியாதெரு "மேநந்தியன் புலம்" பரப்பு நிலலாச்சம் 4-ம் வீடும் கிணறும் பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு கையெழுங்கையும் சதாசிவம் நாகம்மாவுக்குரிய ஆதனம். வடக்கு மேற்சொல்லிய நாகம்மாவுக்குரிய ஆதனம் பொது ஓழுங்கையும், மேற்கு பொன்னையா சோமசுந்தரத்துக்குரிய ஆதனம். தெற்கு சின்னத்தம்பி பெண் தங்கமுத்துவுக்குரிய ஆதனம் மேற்சொல்லிய கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும். மற்றவர்களுக்கு புறநீங்கலாக இது அடங்கலும் பதிவு இலக்கம் D 213/111.

சி. செ. மாரிமுத்து,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
M 95 10-7-64

விதானை வளவு
9-6-64,

## காணி விற்பனவு விளம்பரம்

அராலி கிழக்கு தற்போது கொழும்பில் வீருந்தோட் பிளேஸ் (Frank fort Place) 25-ம் இலக்க வீட்டிலிருக்கும் துரைராஜா கிருஷ்ணன் பெண் பஞ்சலெட்சுமிக்குச் சொந்தமான இதன் பின் காணும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணி காணிச் சொந்தக்காரரின் கேள்விப்படி 25-7-64 சனிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று அராலி கிழக்கிறை "வீமச்சிட்டி" என்னுங் காணி உறுதிப்படி நில. பர. இலா. 9 5/8 அளவும்படி நில. பர இலா. 10 3/4 பனைகள் வடலிகள் செய்பயிர்களும் எல்லை கிழக்கு வேலன்பெண் கட்டச்சியினதும் ஆறுமுகம் தம்பிமுத்துவினதும் ஆதனம் வடக்கு வேலுப்பிள்ளை சிவப்பிரகாசனினுதனம், மேற்கு வேலுப்பிள்ளை சிவப்பிரகாசனினுதனம், தெற்கு வேலுப்பிள்ளை சிவப்பிரகாசனின் ஆதனமும் ஓழுங்கையும் இதடங்கலிற் சொரியலாய் 3/4 பங்கு 1934 ம் ஆண்டு ஐப்பசி மீ 6-ந்தேதி நொத்தாரிசு E முருகேசம்பிள்ளை முன்னாவில் 947-ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிப்படி நன்கொடை கொடுத்தவரின் ஆட்சியானது.

இக்காணியின் முன் உறுதிகளின் விபரங்கள் மற்றும் விபரங்கள் யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள "சோமஸ்தன்" திரு. C. C. சோமசேகரம் Proctor S. C. & Notany Puclic அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அ. வெற்றிவேலு
(யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு விற்பனையாளர்)

19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
M. 98 10-7-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவிட்டபுரம் அம்பலவாணர் இராசதுரையும் பெண் பரிமளலெட்சுமியும் —வழக்காளிகள்

இல. M. B. 5575

எதிராக

வசாவிளான் வயிரவநாதர் பொன்னம்பலம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 5575-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை, 1964-ம் ஆ ஆவணி மாதம் 15-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: — முதல் வட்டி ரூபாய் 1200-ம் சித்திரை 63 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் ரூபாய் 600 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 197—16½ சதமும்.

ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மலியிட்டிக் கோவிற்பற்று பலாலிஇறை "அணுத்தம்பை" பர. நில. இலா. 14 5/8 ம் அதைச் சேர்ந்தவைகளும்- இதற்கு எல்லை கிழக்கு சபாரெத்தினம் சின்னத்தம்பியின் ஆதனம் வடக்கு வயிரவன் பொன்னனுக்கும், சபாரத்தினம் சின்னத்தம்பியும் [illegible] ஆதனமும் மேற்கு [illegible] கைம்பெண் செல்லச்சிடபிள்ளையின் ஆதனம் தெற்கு சபாரெத்தினம் சின்னத்தம்பியினுதனம், பதிவு இலக்கம் H 282/86 இதுல் [illegible] அரைவாசி. இதடங்கலும்.

2 ஷி கோயிற்பற்று வயாவிளான் இறை "மாரிசிட்டி" பர. நில. இலா (15) பதினைந்து. இதற்கு எல்லை கிழக்கு வயாவிளான் பிள்ளையார் கோயில் ஆதனம். வடக்கு இளையம்பி பெண் முத்துப்பிள்ளைக்கும், நாகலிங்கம் பெண் சின்னம்மாவின் ஆதனமும் மேற்கு பூதப்பிள்ளை இளையதம்பியின் ஆதனம், தெற்கு அப்புக்குட்டி வெள்ளைத்தம்பிக்கும் சகோதரங்களுக்கும், நாகன் சிதம்பரிக்கும் உரிய ஆதனம். பதிவு இலக்கம் H 282/87 இதடங்கலும்.

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனரும் விலைமதிப்பாளர்
16 A, அம்மன் றோட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M 83 10-7-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

இறந்துபோன,
கோப்பாய் வடக்கு
சின்னக்குட்டியார் வல்லிபுரம் 16-4-63 ஓடர் பிரகாரம் கோப்பாய் வடக்கு சின்னக்குட்டியார் வல்லிபுரம் மகன் செல்வராணி —வழக்காளி

எதிராக

1. இருபாலை,
கந்தையா காசிலிங்கம்
2. ஷெயூர் பெண் அன்னம்மா —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிகோட்டின் M.B, 3889-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1964-ம் ஆ ஆவணிமீ 15உ சனிக்கிழமை முற்பகல் 9½ மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3885-ம், ரூபா 2500-க்கு 16-2-1961 தொடக்கம் 8-11 1961 வரை 10 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 221-85 சதம்.

காணி விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க்கோவிற்பற்று கோப்பாய் தெற்கு "கொடுவாக்கைவாச்சால்" பர. நெ. இல. மூப்பதொன்பதுடன் எட்டில் ஏழு (பர,நெ இல, 39 7/8) அதற்குரியவைகளும், எல்லை கிழக்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவிற்குரியவாதனம். வடக்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவிலிற்குரியவாதனமும், குளமும், மேற்கு விசுவனுதர் இலக்கையருக்குரியவாதனம். தெற்கு டக்டர் எஸ். சுப்பிரமணியதிற்குரியவாதனம் இதன் பதிவு K 181/183,

ந. ஆறுமுகம்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்,
சித்தங்கேணி
6-7-64.
M 93 10-7-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, M,B, 7744

கொழும்பு டிஸ்திறிக்கோட்டில்
இல: 45 இராசாத்தி வீதி,
கோட்டை, கொழும்பு
அம்பலவாணர் சரவணபவான் —வழக்காளி

எதிராக

சங்கானை கிழக்கு, சங்கானை
1, சின்னையா செல்வநாயகம் பெண் கமலாம்பிகையும் சென்மேறிக் கல்லூரி, கேகோல்
2, சின்னையா செல்வநாயகமும் —எதிராளிகள்

கொழும்பு டிஸ்திறிக்கோட்டில் M. B, 7744-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1964-ம் ஆண்டு புரட்டாதிமாதம் (8-9-64) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 2000. இன்னும் ரூபா 1000-த்துக்கு 9-6-61 தொடக்கம் 6-12-62 வரைக்கும் 100-க்கு 21 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 448 சதம் 15.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோயிற்பற்று நவாலி இறை "தேசிய பாதனை வளவு" உறுதிப்படி பர, நில, இலா. 11¼. ஆனால் உலாந்தா அளந்த ஆட்சிப்படி பர, நில. இலா, 11¾, பனைகளும், எல்லை கிழக்கு அருணாசலம் நாகநாதிக்கும், சகோதரிக்கும், ஓழுங்கை முகப்பும், வடக்கு சோமநாதர் வயிதநிலிங்கம் பெண் செல்லம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு சின்னக்குட்டி சின்னையாவுக்கும் கார்த்திகேசு தம்பையாவுக்கும் மறுபேருக்குமுரியஆதனம், தெற்கு ஓழுங்கை,

தா, செல்லையா,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
இல: 37. கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
M. 94 10-7-64.

## தெய்வ ஒளி

மலைமகளே! சூரியன் ஆயிரக் கணக்கான கிரணங்களைக் கொண்டு திக்குகள் எங்கும் பிரகாசமடையும்படி செய்கிறான். ஆனால் என் மனதுள்ளே இருக்கும் இருட்டைப் போக்க சூரியனால் முடியாது. உமது கோமளகரமான பாதங்களால் ஆன்மாக்களுக்கு புறம்பும் உள்ளும் இருளை அகற்றி ஆட்கொள்ளுகிறீர்.

—நாராயண பட்டோத்திரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கத்து நீத்த உத்தம அன்பர் மாணிக்கவாசகர்

★

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்கள் எழுதிய ஸ்ரீ மாணிக்கவாசகர் அல்லது "நீத்தார் பெருமை" என்னும் நூலிலிருந்து அநுவதித் தெழுதப்பெற்றது

பாண்டியன் தந்த முதன் மந்திரிப் பதவியைப் பிரமராயர் என்னும் மாணிக்கவாசகர் ஏற்றுக்கொண்டார். இப்படி இராசாங்கத்திலே முதற் பதவிவகித்துச் சீரும் சிறப்பும் பேரும் பொருளும் பெற்ற நமது பிரமராயர் அதற்கு மேலே என்ன செய்தார்? தமக்குக் கிடைத்த மகோந்நதமாகிய லௌகிக மேம்பாட்டையே பெரிதாக மதித்துக் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்றபடி இந்த உலக அநுபவ இன்பங்களிலேயே அமிழ்ந்துநின்றுவிட்டாரா? இல்லை. உலக விஷயத்திலே ஆக உயர் பதவி பெற்ற அவர் அதற்கு மேலும் ஆராயத் தொடங்கினார். ஆன்ம விசாரணை அவருக்கு ஏற்பட்டது.

"நாம் இவ்வுலகத்திலே பிறந்த பின் உண்டாயின இவ்விவகாரங்கள் எல்லாம் இவ் வுடம்போடு ஒழிவனவோ? அல்லது அதற்கு மேற்பட்டும் தொடர்வனவோ? இவ்வுடம்பினுள்ளே குடியிருந்துகொண்டு உடம்பையும் அதன் கரணங்களையும் தன்னதாக ஆண்டு அநுபவிக்கும் உயிர் என்னும் ஒன்று எத்தன்மையது? உடம்பிற்கும் உயிர்க்கும் என்ன பொருத்தம்? இவை இரண்டும் பொருந்திப் பிறந்த பின் நாம் வாழ்ந்து அநுபவிக்கும் பல வகைப்பட்ட போகங்களும் அவற்றை நமக்குக் கொடுக்கும் புவனங்களும் அவ்வுடம்பும் உயிருமாகிய நமக்கு என்ன சம்பந்தமுடையவை? இவ்வனுபவங்களை அநுபவித்துக் கொடுக்கும் நமது கரணங்கள் என்ன தன்மையுடையவை? இவையெல்லாம் எப்படிப் பொருந்துவன? நாமே பொருத்திக் கொள்வன அன்றோ! ஆயின் உயிரை உடம்பிற்குள் புகுத்தி உலகத்தே உண்டு உடுத்துத் திரிந்து மறிந்து கிடைக்கச் செய்வது யாருடைய செயல்? இவ்வாறு இவைகளைச்செய்யும் கர்த்தாஒருவர்உண்டா உண்டானால் அவர் எத்தன்மையுடையவர்? அவர் ஏன் உயிரையும் உடலையும் உலகத்தையும் பொருத்துதல் வேண்டும்? இப்பொருத்தமானது உடலைவிட்டு உயிர் பிரிந்த பின் என்ன ஆகின்றது? உலகமானது உடலுக்கு இன்ப துன்பங்களை விளைத்துக் கொடுக்கக் காண்கிறோம். அது போல உயிர்க்கு என்ன விளைத்துக்கொடுக்கின்றது? முடிவான இன்பமா? துன்பமா? உலக இன்பங்கள் யாவும் அழியுந் தன்மையுடையனவாய்த் துன்பசொரூபமாகவே காணப்படுவதால் அழியாத இன்பம் எங்கே இருக்கின்றது? அரிதிற் கிடைத்த இம்மானிடப் பிறவியானது நாழிகையும், நாளும், மாதமும், வருடமுமாகக் கழிந்து நம் உயிரை வாள்போல் அறுத்துத் தள்ளி வருகின்றதே.

நம வாழ்நாள் முடிந்து விடுவதன் முன்னமே முடியாத இன்பத்தை அடையும் வழியைத் தேடிப் பெற்றுக்கொள்வதல்லவோ நாம் அறிவுபெற்ற பயன்? ஆவ்வுலக இன்பம் போலவே மறுமைப் போகங்களும் அழிந்து பயன்படுவனவாமே. ஆதலால் அவை நாம் ஆசைப்படத்தக்கவையல்ல. நித்தியானந்தமாகிய மோட்ச இன்பமே நாம் தேர்ந்து அடையத்தகுவது. அதை அடைவதெப்படி? பௌத்தம் முதலிய புறச் சமயமார்க்கங்களும் வேதத்தைத் தழுவிய ஏனைய அகச் சமய மார்க்கங்களும் நம்மை அழுக்கைப் போக்கிச் சிவனருளை விளக்குவன அல்ல பத்திமார்க்கத்திலே நின்று சிவனருள் பெற்ற உண்மையடியார்க்கே மோட்சமளித்திக்கும்என்று வேதம் முழங்குகின்றது. பொது நூலாகிய அவ்வேதத்திலே முடிந்த முடிவான சித்தாந்த உண்மைகளைச் சத்தினிபாதமுற்ற உத்தமர்களுக்கு ஆகமங்கள் உணர்த்துவன என்று பெரியோர் சொல்லுவர். அவ்வேதாந்தசித்தாந்த மோன சமரசமாகிய உண்மையை உணர்ததி ஆணவ இருளைப் போகக் என்னை எனக்களிப்பதோடு தன்னையும் உணர்த்திக் கிடைப்பித்து இன்பத்திருத்த வல்ல குருநாதன் எப்போது கிடைப்பான் அவனருளாலன்றி இக்கொடிய பாசத்தை நம் ஆராய்ச்சிகளாலே நீக்கத் துணிவது கடலைக் கையால் நீந்திக் கடப்போம் என்பதனோடொக்கும் என்றிவ்வாறெல்லாம் தமக்குள் பலநாளும் பிரமராயர் சிந்திப்பாராயினர். அமைச்சர் தொழிலையும் விட்டாரில்லை. அத்தொழிலையும் அரசசபையிலே சென்றிருந்து அமைதிபெற நடத்துவார். உலக விவகாரங்களிலேயும், உலகத்திறகும் அரசருக்கும், தமைச் சார்ந்தவர்கட்கும் தாம் செய்யவேண்டிய கடமைகளிலேயும் ஒருசிறிதும் தவிரார். ஆனால் அக்கடமைகளைச் செய்து கொண்டே மேலே நாம் காட்டிய வகையிலே ஆத்மவிசாரணையிலே தம் அறிவைச் செலுத்தி உண்மூகமான பரிசோதனையையும் ஒருங்கே செய்து வந்தார். அரசசபைக்கு வரும் அறிஞர்களைக் காணுந்தோறும் இவ்விடயங்களை விசாரிப்பார் அவர்கள் சொல்லும் விடைகள் ஒன்றும் இவரை ஒரு சிறிதும் திருப்திப்படுத்தவில்லை "உண்ணு நீர் விடாய்க்கு உவரிநீர் உண்டவர் ஒப்ப" ஆத்ம விசாரணை என்ற தாகம் வரவர அதிகரிக்கப் பெற்றாரே ஒழியத் தணியப்பெற்றாரில்லை. இதைத் தணித்து ஆன்ம தரிசனமும் பதியறிவும் தலைக்கூடும்படி அனுக்கிரகிக்கவல்ல ஆசாரியரை அடையும ஆசை அவருக்கு மேலிட்டு வந்தது இது முதிர முதிர அவருக்கு இவ்வுலக வஸ்துக்களின் அழியுந் தன்மை மெல்ல மெல்லத் தோன்றி வளர ஆரம்பித்தது. அழியாத இன்பந்தரும் ஆப்த விடயங்கள் புலப்பட ஆரம்பித்தன. இம்மை மறுமை இன்பங்களிரண்டும் நிலையற்றனவாதலால உண்மையுணர்ந்தோரால் வரும்பத்தகுதவை என்ற துணிபு பிறந்தது. அவரறின் மேலுள்ள ஆசை குறையத் தலைப்பட்டது சாசுவத சுகசொரூபியாகிய பரமசிவனிடத்ததலே பதிந்த கருத்துடனே அவனை அடைவதாகிய பரமசாயுச்சியத்திற்குரிய வழிகளைத் தேர்வாராயினர்

தொடர்ச்சி 6 ம் பக்கம்

## சங்காபிடேகமும் திருவிழாவும்

—o—

யாழ். வண்ணை மாநகரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வேங்கடேசுவரதாஜப்பெருமாள் கோவிலில் 10-7-64 வெள்ளிக்கிழமை நவோத்தர சகஸ்ரசங்காபிடேகமும் இரவு திருவிழாவும் நடைபெறும்.

## சைவத் தலைமையாசிரியரை நியமிக்குக

மட்டக்களப்பு அரசடி மெதடிஸ்த மிசன் பாடசாலைக்கு சைவமதத்தைச் சேர்ந்த தலைமையாசிரியரொருவரை நியமித்துத் தரும்படி மேற்படிபாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் கிழக்கு மாகாண உதவி வித்தியாதிபதியைக் கோரியுள்ளனர்.

இப்பாடசாலையில் உள்ள மெத்த மாணவர்களில் 99 வீதமானோர் சைவ மாணவர்களெனச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

## மாணிக்கவாசகரும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மைய விபூதியை அணிந்து ஸ்ரீ பஞ்சாட்சர செபஞ்செய்து செம்மை மனத்தோடு ஆலயத் தொண்டாற்றி இறைவனை அருச்சித்து வணங்கி அருட்பாடல்களைப் பாடி அவன திருவடியை அடைய வேண்டுமெனபதே மாணிக்கவாசக சுவாமிகள் கருத்து என்று சொல்லலாம.

"ஓடும் கவந்தியுமே
உறவென நாடுள் கசிந்து
தேடும் பொருளும் சிவன
கழலல வெனத் தெளிந்து
கூடுமியிருங் குயண்டையிடக்
குனித் தடியேன்
ஆடுங்குலாத திவ்லை
ஆண்டானைக் கண்டேனே."

—xxx—

உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த

# கொடிக்கவி

[ சைவப்புலவர் திரு இ. செல்லத்துரை அவர்கள் ]

( முற்றொடர் —14 )

2. திருவைந்தெழுத்தின் பொருண்முறைமை:-

'சிவய நம' என்னுந்திருவைந்தெழுத்தில் சிகாரம் சிவத்தையும் வகாரம் அருட் சத்தியையும் யகாரம் ஆன்மாவையும் நகாரம் திரோதான சத்தியையும் மகாரம் மலத்தையும் குறிப்பன. இதனை "ஈசன் அருள் ஆவி எழிலார் திரோதம் மலம் ஆசு இல் எழுத்து அஞ்சின் அடைவாம்". (உண் வி ா. செய். 40) என்பதனாலும் அறிக.

'ஓம்' என்னும் பிரணவ மந்திரமும் ஐந்தெழுத்துப் பொருண் முறைமையினை உடையதென்றும். அது சூக்குமமாய் அமையப்பெற்றதென்றும், அதில் பொருந்திய நாதம், விந்து, மகரம், உகரம், அகரம் என்பன முறையே சிவம், அருட்சத்தி, மலம், திரோதானசத்தி, ஆன்மா என்னும் பொருளமைவை உடையன வென்றும் கூறுப. இதனை "இறைசத்தி பாசம் எழில் மாயை ஆவி உறநிற்கும் ஓங்காரத்துள்" (திரு அரு. பய. அதி 9 செய் 2) என்பதனாலும் உணர்க. இனி, ஓங்காரம் இறைவனது பஞ்சாக்கரத் திருவுருவில் திருவாசியாகவும், அதிற் பொருந்திய அக்கரங்கள் உள்ஒளியாகிய சுடர்களாகவும் அமைந்திருக்குமென உண்மை விளக்கம் (செய் 34) உரைப்பதுவும் ஈண்டுணரததக்கது.

3. திருவைந் தெழுத்தின் வகை:

ஆன்மாக்களின் பக்தவ நிலை வேறுபாடுகளுக்குத் தக அவை செபித்தறகுரிய திருவைந்தெழுததுக்களும் வகைப்படுத்தப்பட்டுள. அவை: தூல பஞ்சாக்கரம், சூக்குமபஞ்சாக்கரம், அதி சூக்கும பஞ்சாக்கரம், சூக்குமோ சூக்கும பஞ்சாக்கரம், மகாமனு என்பன.

தூல பஞ்சாக்கரம்: திரோதான சத்தியாகிய நகாரமும் மலமாகிய மகாரமும் முதலாக, ஆன்மாவாகிய யகாரம் இறுதியாக ஓதப்படுவது; சமயாசார கன்மானுட்டானங்களுக்குரியது இதற்கு உபாயமார்க்கத்தார் அதிகாரிகளாவர். முத்தியில் விருப்பமுடைய உண்மை மார்க்கத்தாருக்கு இது ஏறறதன்று. "மாலார் திரோதம் மலம் முதலா மாறுமோ - மேலாசு மீளா விடின்" (திரு அரு. ப அதி. 9 செய். 5) என்பதனாலும், "ஆதி மல மிரண்டும் ஆதியாவோதினால் சேதியா மும்மலமும் தீர்வாகா....." (உண். விள. செய் 43) என்பதனாலும, உண்மை மார்க்கத்தாருக்கு நகாராதி பஞ்சாக்கரம் உரித்தன்றென்பது வலியுறுத்தப்பட்டமை உணரத் தக்கது.

சூக்கும பஞ்சாக்கரம்: சிகார வகாரங்கள் முதலாக, நகார மகாரங்கள் இறுதியாக யகாரம நடுவணதாக உச்சரிக்கப்படுவது; உண்மை மார்க்கத்தாருக்குரியது. இதனை முத்தி பஞ்சாக்கரம் எனவும் கூறுப. இப் பஞ்சாக்கரமே உண்மை மார்க்கத்தாருக்கு உரியதென்பதற்கு,

"சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்
பவமீது நீயோதும் படி"
(திரு, அரு, ப. அதி. 9. செய். 7)

"ஆராதி ஆதார மந்தோ வதுமீண்டு
பாராது நீயோதும் பற்று."
(திரு. அரு. ப. அதி. 9, செய்-6)

அண்ணல் முதலா வழகா ரெழுத்தைந்தும்
எண்ணில் இராப்பகலற றின்பத்தே — நண்ணி
அருளா னதுசிவத்தே யாக்கு மணுவை
இருளா னதுதீர வின்று.
(உண்மை விள, செய். 42)

என்பன சான்றாத லுணர்க.

ஆதி சூக்கும பஞ்சாக்கரம்: சிகார வகாரங்கள் முறையே எதிர் நிரல் நிறையாகவும் யகாரம் அவற்றுக்கிடையேயும் நிற்க ஓதப்படுவது; (இதுவும் உண்மைமார்க்கத்தாருக்குரியது.) இது காரண பஞ்சாக்கரம் எனவும், முத்தி பஞ்சாக்கரம எனவும், இருதலைக்கொள்ளி எனவும், இருதலை மாணிக்கம் எனவும் பெயர்பெறும்.

சூக்குமோ சூக்கும பஞ்சாக்கரம்: நகார மகாரங்களாகிய திரோதம மலம என்பன நீங்கப்பெற்ற யகாரமாகிய ஆனமா வகாரமாகிய திருவருட்சததியினால் பீடிக்கப்பட்டு அவ்வருட்சத்தியின வசத்ததாய் அதுவேயாய் நிறகச் சிகரமும் முன் நிற்கும்போது உளதாவதாம். (இதுவும் உண்மை மார்க்கத்தாருக்குரித்து.) இது மகா காரண பஞ்சாக்கரம் எனவும்படும்.

மகாமனு: சூக்குமோ சூக்கும பஞ்சாக்கரமாகிய சிகார வகார மிரணடினுள், (யகாரமாகிய ஆன்மாவை அடக்கிக் கொண்ட) வகாரமாகிய திருவருட்சததியையும் தன்னுள் அடககிக்கொண்டு, சிகாரமாகிய ஓரெழுத்து மாத்திரையாய் நிற்பதாம். இதற்கு இறையெழுத்து, பெருவெழுத்து, பிரணபீஜம், நாயோட்டு மந்திரம் என்பன மறு பெயர்கள்.

(தொடர்ச்சி 6ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசகசுவாமிகள் வரலாற்றில்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(குதிரைமீது ஏறி அமர்ந்து மதுரையுட் புகுந்தருளி என்பது கருத்து).

"நரிகைக் குதிரைப் பரியாக்கி
ஞாலமெல்லாம் நிகழவித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்சமேற்றும் பெருந்துறையாய்"
— ஆனந்தமாலை (10)

(நரிகளைக் குதிரை வாகனமாக்கி உலகமெல்லாம் தெரியும்படி செய்து பாண்டியனது பெரிய ஊராகிய மதுரையிலுள்ளவர்களுக்கெல்லாம் திகைப்பினை மிகுதிப்படுத்துந் திருப்பெருந்துறைப் பெருமானே" என்பது கருத்து).

"நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவாறன்றேஉன் பேரருளே"
— திருவேசறவு (1)

(கருத்து வெளிப்படை)

இதேபோல் மண்சுமந்து அடிபட்ட செய்திக்கும் அகச்சான்றுகள் உள.

கண்சுமந்தநெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.
— திருவம்மானை (8)

(பொருள் வெளிப்படை)

"மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடி".
— திருப்பூவல்லி (16)

"ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுகந் தருளிய பரிசும்"
கீர்த்தித்திருவகவல் (46—47)
— (தொடரும்)

## உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த....

[ 5-ம் பக்கத் தொடர்ச்சி ]

4. ஓதும்முறை நெஞ்சழுத்தி நிற்கும் முறைகளால் முத்தி யெய்தும் முறை:—

சிவயநம என்னும் சூக்கும பஞ்சாக்கரம முதல் மகாமனு ஈறாகச் சொல்லப்பட்ட (உண்மை மார்க்கத்தாருக்குரிய) பஞ்சாக்கரங்கள் படிமுறையே பக்குவ முயர்ந்து செலலும் ஆன்மாவினால் ஓதுதற்கும் நெஞ்சழுத்தி நிற்றற்கும் உரியவை, ஓதுதல் மூவகைப்படும். அவை உரை, மநதப, மானதம் என்பன. அருகிலிருப்போருக்குங் கேட்குமபடி ஓதுதல் உரையெனவும, தன் செவிக்கு மாத்திரம புலனாகும்படி நா நுனி உதட்டைத தொடாதவாறு உச்சரித்தல மந்தம் (அலலது உபாம்சு எனவும், நா நுனி உதட்டைத தீண்டாதிருக்க ஒருமை பொருந்த நின்று மனத்தில செபித்தல் மானதம எனவும் சொல்லப்படும். இம மூவகைக்கும் அப்பாற்படச் சுத்த மானதம் எனவும ஓருவகையுண்டு. அது அறிவாற் கணித்தல் எனப்படும். இன, நிற்றலாவது சூரிய னொளியும் கண்ணொளியும ஒன்றுதலால கண் ஒரு பொருளைக் காண்டல்போல, வியாபகமான சிவத்தில் உயிர் வியாப்பியமாய் — அடங்கி அச்சிவத்தின் வழித்தாய் நிலைத்தலாம். ஓதும முறையும் நெஞ்சழுத்தி நிற்கும் முறையும் வேறுபடுதலின்றி ஒன்றாக நடைபெறுதல் வேண்டும். அசானுபதேசத்தின்படி, இவ இருமுறையுந் தவறாது, உண்மை மார்க்கதார் சூக்கும பஞ்சாக்கரத்தை ஓதுங்கால், திரோதான சத்தி மலத்தை நீக்கும்; மலம் நீங்கவே அத்திரோதான சத்தி அருட்சத்தியாய்மாறி நிற்கும். இப்போது, ஆன்மா அதி சூக்கும (காரண) பஞ்சாக்கர நிலையைப் பெறும். அதன்மேல், ஆன்மா அருட சத்தியின் வசப்பட்டு அவ் அருட்சத்தியேயாய் நிறகும், அங்ஙனம் நிற்கும்போது அது சூக்குமோ சூக்கும (மகா காரண) பஞ்சாக்கர (மாகிய 'சிவ' என்னும்) நிலையை அடையும், அப்பால், சிவ சத்தியுடன் ஒன்றாய் நின்ற ஆன்மா அதன் துணையால் சிவமயமாய் ஏகனாகும். இது மகாமனு (வாகிய 'சி) என்னும் பஞ்சாக்கர நிலைமையை அடைதலாம். இவ்வுண்மைகளை:

"ஆசுறு திரோத மேவா தகலுமா சிவன்முன் னாக
ஓசைகோ ளதனி னம்மே லொழித்தரு ளோங்கு மீள
வாசியை யருளு மாய மற்றது பறாறு வுறாங்
கீசனி லேக மாகு மிதுதிரு வெழுத்தி னீடே"
(சுவப். செய். 92)

"ஆசினவா நாப்ப ணடையா தருளினால்
வா சியிடை நிற்கை வழக்கு"
(திரு. அரு. ப, அதி. 9 செய் 9.)

"வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு"
திரு. அரு. ப, அதி 9 செய் 8)

எனபன கொண்டாராய்ந் துணர்க. இனி, யகாரமாகிய ஆன்மா வகாரமாகிய திருவருளோடு ஒன்றுங்கால் ஆன்ம போத மகன்ற சுத்த நிலையில் நிறகும என்றதற்கும், அந நிலையில் அதனறிவும் செயலுமற்று இறைவனின் அறிவும் செயலுமேயாய் ஏகனாகி இன்பத் தழுந்தும என்றதற்கும

"நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தனனையே தந்தானென் றுந்தீபற"

என்னுந் திருவுந்தியார் (செய் 6) சான்றாதலு முணர்க,

கொடிக்கவி

மூலமும் உரையும் முற்றிற்று.

உமாபதி சிவாச்சாரியார் திருவடி வாழ்க.

## அன்பே இறைவ ...

1-ம் பக்கத் தொடர்ச்சி

மிருகங்களும் மனிதனைப் போலல்லாவிட்டாலும் ஒலி முறையில் தங்களுக்கிடையே பேசிகொள்கின்றன. ஆறறிவு படைத்த மனிதன், தனக்கு ஒப்பாரும மிக்காருமி இலலாத தன்னிகரிலலாத தலைவனுடன் பேசுமபொழுது அது உள்ளத்தைக் கடந்து நிற்க வேண்டும். அன்பினாலதான் இறைவனுடன் பேசலாம். எண்ணைக் கறைபடிந்த கடதாசியில் எழுத முடியாது அழுக்குப் படிந்த கண்ணாடியில் முகம பார்க்க முடியாது. அதேபோல கறை அல்லது அழுக்குப் படிந்த உள்ளததுடன் இறைவனை நாம காணவோ அடையவோ முடியாது. இறைவனுடன் பேச முயலும பொழுது அன்பு தெய்வமாகப் பரிணமிக்கின்றது.

செந்தமிழ் நாட்டில் எண்ணிறந்த சிவனடியவர்கள் தோன்றினார்கள். அவர்கள் வாக்கு தெய்வ வாக்கு தெய்வம அவர்கள் நாவில் களிநடம்புரிந்தது. அவர்கள ஆணை இட்டார்கள சொல்லிய பாட்டின பொருளுணர்ந்து சொல்லுவார் செலவர் சிவபுரத்திலுளளார் சிவனடிக்கீழ்ப் பலோரும் ஏத்தப்பணிந்து' எனவே எப்படி அரசாங்க முததிரைபெற்ற கடதாசிக்கும மறறைய கடதாசிகளும வேறுபாடுள்ளதோ அதேபோல் இறைவனுடைய அருள முததிரை பெற்ற பாடல்களுக்கு எவ்வளவு பெருமை உள்ளது, 'கல்லார் நெஞ்சின நில்லார் ஈசன்," எனவே காலையும, மாலையும் மற்றும் இடர்வந்துறற காலங்களிலும அருள்பெற்ற பாடல்களை ஓதி அன்பை வளர்க்க வேண்டும். இறைவனுடன் தொடர்பு கொள்வதற்குப் பிரார்த்தனையே சிறந்த வழி. தனித்துப் பிரார்த்தனை செய்வதிலும பார்க்கக் கூட்டுப்பிரார்த்தனை செய்வதே மேல. ஏனெனில இங்கு நான் என்பது மறைந்து நாம் என்பது தோன்றுகிறது. உணவுப பசி எடுத்தவர்கள் உணவு இருக்கும் இடத்தை நாடுவார்கள. அதேபோல அறிவுப்பசி யுடையவர்கள அறிவு இருக்கும இடத்தை நாடுவார்கள். இவ்வித கூட்டுப் பிரார்த்தனைகள மக்கள் மனதில அன்பைப் பெருக்கி, நலவழிப்படுத்தும் என்று எண்ணுவதாகக கூறி இக்கூட்டுபபிரார்த்தனையின் ஆவகசியத்தை விளக்கி உணரவைத்தார்கள். கடைசியாகப் பக்கவாத்திய சகிதம் தமிழ் மறையோதல் சங்கீதபூஷணம க. இ. நடராஜன அவர்களால் சிறப்பாகச் செய்யப்பட்டது. திரு சி. உ சோமசேகரம் அவர்கள் குறிப்புரைகூறும்பொழுது எப்படிததான் ஒருவர் வெறும ஏட்டுப்படிப்பில் கரைகண்டு பாண்டித்திய மடைந்தாலும் அவர் கற்ற நெறியைக் கைககொண்டு வாழாவிட்டால அப்படிப் பாற பிரயோசனம் சிறது மில்லை என்றார்கள்.

## திருக் கோளிலித் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம 5வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுபபிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஆதீனத்திற்குச் சொந்தமான 7 சிவாலயங்களில் ஒன்றாகவும், சப்தவிடங்க ஸ்தலங்களுள ஒன்றாகவுமுள்ள திருக்குவளை என வழங்கும் திருக்கோளிலி என்ற க்ஷேத்திரத்திலுள்ள அவனிவிடங்க ஸ்ரீ தியாகராசசுவாமி ஸ்ரீ பிரமபுரீசுவர சுவாமிதேவஸ்தானத்தை, ஜீர்ணோதாரணம் செய்து 6 காலம் யாகசாலை பூசைகளை வைதீக முறையாக வேதசுவாகமம், திருமுறைப் பாராயணங்களுடனும் 4 நாள் திருமுறை மகாநாடுகளுடன் நடத்தி ஆனி 16ந தேதி காலை அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்தைச் சிறந்தமுறையில் நடத்தி வைத்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகாசந்நிதானம அவர்கள் அருளாட்சியை ஏற்று 19ஆண்டு காலத்தில் ஆதீனத்திற்குச் சொந்தமான 27 சிவாலயங்களில் 6 சிவாலயங்களைப் பெரும் திட்டங்களில் ஜீர்ணோத்தாரணங்கள்நடத்தி அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகங்கள் செய்துள்ளார்கள்

மேலும் திருப்பனந்தாள் க்ஷேத்திரத்திலுள்ள ஸ்ரீ காசிமடஸ்வரர்தேவஸ்தானத்தையும் மகாகும்பாபிஷேகம் நடத்தி வைப்பதற்கு ஸ்ரீஸ்ரீ கயிலைகுருமணிகள் ஜீர்ணோத்தாரண திருப்பணிவேலைகளைத் துரிதமாக நடத்திக்கொண்டும் வருகின்றார்கள்.

தருமபுர ஆதீனம நிறுவப்பட்டது முதல் சுமார் 500 ஆண்டு காலத்தில் 27 தேவஸ்தானங்களை ஜீர்ணோதாரணங்கள்செய்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத தரிசனம் செய்யும் பாக்கியம் ஸ்ரீலஸ்ரீ 25வது கயிலை குருமணி அவர்களுக்கே கிடைக்கக்கூடியதாகும். (ந—நி.)

x x x

## திருவாசக மகாநாடும் நூல் வெளியீடும்

சிதம்பரம் ஆனி 16

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம 21 வது குருமகாசந்நிதானம ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகளின் முனனிலையில், ஆதீனததிற்குச் சொந்தமான ஆளுடையார் கோயில் என வழங்கும திருப்பெருந்துறை ஆலயமுகப்பு மண்டபத்தில் ஆனி 9, 10 இரு தேதிகளிலும திருவாசக மகாநாடு நடைபெறறது. முதல்நாள், சென்னை பலகலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் திரு. டி. எம். பி மகாதேவன் அவர்களும இரண்டாம் நாள் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்ப்பேராசிரியர் திரு தெ பொ மீனாட்சி சுந்தரம பிளளை அவர்களும தலைமை வகித்தார்கள்.

ஆதீனமகாவித்துவான் ஸ்ரீ ச. தண்டபாணிதேசிகர் வரவேற்புரை கூறி நூல்களின் வெளியீட்டுரை நிகழ்த்தினார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாசகம் குருவருள்விளக்கம் என்னும் உரை நூலையும் திருப்பெருந்துறைப் பட விளக்க நூலையும் தொகுத்து மகாநாட்டில் வெளியீடு செய்தார்கள். (ந—நி)

## ஒழுக்கத்து நீத்த உத்தம அன்பர் மாணிக்க வாசகர்

5-ம் பகக்த் தொடர்ச்சி

"மெய்மை யாம் பொருள்
விவேகமும் வேறுபாடாய
பொய்மை யாம் பொருள்
விவேகமும் புந்தியுட்டோ [ன்ற
இம்மையாசையும் மறுமையி
லாசையு மிகந்து
செம்மையாகிய கருத்தராய்ப்
பரகதி பெறுவார்"

இந்தவிதமாக நமது பிரமராயர் குலநலத்திலே பிராமணராக ஒழுகினார். அரசனிடத்திலே அமைச்சராக ஒழுகினார். குடிகளிடத்திலே கருணை கொண்ட தாயைப்போலஒழுகினார் சுற்றத்தாரிடத்திலே பற்றுக்கோடுள்ள சுற்றமாய் ஒழுகினார் என்றிந்த வகையேல தமக்குரிய ஒழுக்கத்தின்நின்று அறம் வளர்த்தார். "அதுகாரணமாகப் பாவந்தேய்ந்தது, பாவந்தேய அறியாமை நீங்கிற்று. அது நீங்கவே நித்திய அநித்திய வேறுபாடுணர்வும் இம்மை மறுமைபிபை உவர்ப்பும பிறவித்துன்பமும தோன்றின. அவை தோன்றவீடடி ஆசையுண்டாயிறறு. அதனால் தியாக முயற்சியுண்டாயது. அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்தது புறப்பற்றாகிய எனது என்பதும் அகப்பற்றாகிய யான் என்பதும் விட்டன" என்றபடி இப்பற்றுக்களை இயமுறையே உவர்த்த நிலையினைற நமது பிரமராயர் தமக்குரிய ஒழுக்கத்தின்கண் நின்றே நீத்தாராயினார். அஃதாவது உலகத்தை அவர் விட்டவராயினார் இந்நிலையில் அவர்:—

ஒழுக்கத்து நீத்தார் பெருமை
விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிபு.

என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாக விளங்கினார்.

## நெடுந்தீவு மேற்கு உயரப்புலம் மன்றாடும் ஐயனார்கோயில்

இக்கோயிலின் இவவருட மகோற்சவம் 15-7-64 புதன்கிழமை ஆரம்பமாகுமெனவும் 25-7-64 சனிக்கிழமை இரதோற்சவம் நடைபெறுமெனவுந் தெரியவருகின்றது. மேற்படி கோயில் பண்டைக் காலத்தில் நெடுந்தீவை அரசாண்ட வெடியரசனால் தாபிக்கப்பட்டது, இப்பொழுது ஐயம்பெருமாள் சின்னததம்பி என்பவருடைய சந்ததியார் நிருவகித்து வருகின்றனர் என அறியவருகிறது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை நாகேசன்துறை வீதி 450-ம் இலக்கததிலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுன்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 9-7-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org